## இலங்கை சமூக பாதுகாப்புச் சபை – 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகளை மீளாய்வாண்டின் போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) 2011 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 41,567 தொகையால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 534,826 தொகையான செலவினம் 2012 ஆம் ஆண்டின் செவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 13 சந்தர்ப்பங்களில் வாகனங்களின் பழுதுபார்த்தல்களுக்காக செய்யப்பட்ட ரூபா 522,254 தொகை மற்றும் 3 சந்தர்ப்பங்களின் போது கணனி பழுதுபார்த்தல்களுக்காகச் செய்யப்பட்ட ரூபா 68,621 தொகை

என்பன மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கு வைப்பதற்குப் பதிலாக மூலதன செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(இ) சமூக பாதுகாப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 2,830,000 தொகையான கடன் பணம், வருமானச் செலவினக் கணக்கில் ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக ரூபா 10,305,796 தொகையான பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 9,701,275 தொகை ஒதுக்கப்பட்ட காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 604,521 தொகையால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) அரசாங்கத்தின் மூலதன மானியங்களைக் கணக்கு வைத்தல் தொடர்பாக சபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மூலதன மானியம் வருமானக் கூற்றில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்கு வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 988,800 ொதகையான மூலதன மானியத்தில் ரூபா 920,000 தொகை செலவிடப்பட்டு எஞ்சிய ரூபா 68,800 தொகையானது வருமானக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஊ) வாகனமொன்றை விற்பனை செய்யும் போது சபை பெற்றுக்கொண்ட ரூபா 70,000 தொகையான மீளச் செலுத்தவேண்டிய கேள்வி வைப்புப் பணம், செலுத்த வேண்டிய வைப்பாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த முன்னைய வருடத்திற்கான சீராக்கங்களான ரூபா 4,207,706 தொகையில் ரூபா 17,273 தொகை இனங்காணப்படாமல் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) தளபாடமும் பொருத்திகளுக்கும் பெறுமானத் தேய்வு கணப்பிடும் போது தேறிய பெறுமானம் பூச்சியப் பெறுமதியைக் கொண்ட 4 நிலையான

சொத்துக்களுக்காக ரூபா 22,759 தொகை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் விற்பனைகளினால் கிடைத்த ரூபா 17,557 தொகை நிலையான சொத்துக்கள் விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களுக்குரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதிகள் நிலையான சொத்து விற்பனைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 33,553,016 தொகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான அட்டுறு செலவினம் ரூபா 33,603,608 ஆனமையால் அட்டுறு செலவினம் ரூபா 50,592 தொகை குறைவாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய 32 விடயங்களின் ரூபா 612,408 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்கான முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 161,092,187 ஆக இருந்த போதிலும் அது ரூபா 161,075,348 என ரூபா 16,839 தொகையினால் குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(க) 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முழுமையாகத் பெறுமானத் தேய்விடப்பட்டு முடிவடைந்திருந்த 397 நிலையான சொத்து விடயங்கள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டு புத்தகங்களில் பதிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

இரண்டு அரச வங்கிகளில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிகூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகள் மற்றும் அவ்வங்கிப் புதத்கங்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கும் இடையே முறையே ரூபா 372,866 மற்றும் ரூபா 180,205 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திட்டத்திற்குரிய பங்களிப்புப் பணமாக பங்களிப்பாளர்களினால் ரூபா 1,699,648,532 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 1,519,318,628 தொகை மாத்திரமே முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பங்களிப்புப் பணம் மற்றும் முதலீட்டுக்கிடையே ரூபா 180,329,904 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.4 இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் ''காசேட்டு மீதி'' எனக் காண்பிக்கப்பட்ட 2012 நவம்பர் மாதத்திற்கு முன்பு தொடக்கம் இனங்காணப்படாத பெறுவனவான ரூபா 20,708,353 தொகை இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 நவம்பர் மாதம் தொடக்கம் திசெம்பர் வரை சபையின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலவு வைக்கப்பட்ட தொகை இனங்காணப்படாது காசேட்டில் வரவு வைக்கப்பட்டு பங்களிப்பு நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் அரச வங்கிகளின் மூன்று கணக்குகளில் ரூபா 16,551,654 கூட்டுத்தொகையானது இனங்காணப்படாத காசு மீதியாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைகள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | நி.பி. 104(3), (4) மற்றும் 109 | வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நி.பி. 371(2) | இரண்டு பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 மற்றும் 10,000 என முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | நி.பி. 371(2)(இ) | 2004 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாது கொண்டுவரப்படுகின்ற முற்பண மீதி ரூபா 6,900 ஆகும். |
| (ஈ) | நி.பி. 756 | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | 2009 ஆம் ஆண்டின் பின்னர் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2004 நவம்பர் 30 ஆந் திகதிய பீஈடீ 25(3) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | 2012 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,519,318,628 தொகைக்காக நிதி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளிலிருந்து நிதி விளைவுகள் ரூபா 18,535,954 பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 15,297,054 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 3,238,900 ஆல் வீழ்ச்சி ஏற்பட்டமைக்காக நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 8,292,612 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் உத்தேசத்திட்டத்திற்காக மாவட்ட மட்டத்தில் 50,000 பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 7,450 பங்களிப்பாளர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தனர். 2010 ஆம் ஆண்டில் 40,760 நபர்களும், 2011 ஆம் ஆண்டில் 39,593 நபர்களும் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவ்விரண்டு வருடங்களுடன் ஒப்பீடுசெய்த போது மீளாய்வாண்டில் பங்களிப்பாளர்களைச் சேர்ப்பது அதிகளவு வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சமூக பாதுகாப்புச் சபையினால் ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 442,708 ஆக இருந்த போதிலும் அதில் 331,448 பங்களிப்பாளர்கள் செயற்பாடற்ற நிலையில் இருந்தனர். பங்களிப்புப் பணத்தை நாளதுவரையாக கணக்கு வைக்கப்படாதிருந்தமை இவ்வாறு பங்களிப்பாளர்கள் செயற்பாடற்றமைக்குத் தாக்கமளித்திருந்தன.

(இ) பங்களிப்பாளர்களைச் சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டதற்கு மேலதிகமாக 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(i) சாத்தியமான சமூக படித்தரங்களை இனங்காணுதல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பின்பற்றப்படுகின்ற வழிமுறைகள் என்ன எனவும் அதன் விளைவுகள் என்ன எனவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இதன் மூலம் சபை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் என்ன எனவும் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கும் வலைப்பின்னலை விரிவாக்குவதற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் பங்களிப்பாளர்களைச் சேர்ப்பது அதிகளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.

(iii) ஆக்கபூர்வமானதும் வினைத்திறனானதுமான ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக 2006 செப்தெம்பர் 25 ஆந் திகதிய 1464/5 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சஹன, திலின, இசுறு, சரண மற்றும் தனலக்ஸ்மி போன்ற திட்டத்திற்காக பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு சபையின் எஸ்எல்எஸ்எஸ்பீ 2012/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் 2012 செப்தெம்பர் 15 ஆந் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்திகதி தொடக்கம் புதிதாக சேர்க்கப்படும் பங்களிப்பாளர்களுக்கு ‘‘சுரெகும்’’ திட்டத்தில் மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சுய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களுக்காக ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் ஏற்படுத்தப்பட்டு அதன் முகாமைத்துவம் செய்யும் குறிக்கோளுடன் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை அதிகாரச்சட்டத்தின் மூலம் சமூக

பாதுகாப்பு சபை உருவாக்கப்பட்டிருந்த போதிலும் பங்களிப்பாளர்களுக்காக அமுல்படுத்தப்பட்ட உத்தேசத் திட்டமும் இடைநிறுத்தப்பட்டு "சுரெகும்" திட்டம் மாத்திரம் அமுல்படுத்துவதன் ஊடாக சுய தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு அதிகரித்த நலன்களைக் கொண்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சபையினால் முடியாதிருந்தது.

(iv) 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது செய்யவேண்டிய 12 பிரதான செயற்பாடுகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிறைவேற்றுவதற்கு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளின் இலக்குத் திகதி மற்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமைக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களையும் ஆண்டின் போது ஏற்பட்ட குறைபாடுகளையும் சரிசெய்வதற்கு எதிர்வரும் வருடங்களில் செயலாற்றல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சபை இயலாதிருந்தது.

**3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பகுதியின் 21(2)(ஆ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் பங்களிப்புப் பணமாக சபைக்குக் கிடைக்கின்ற சகல பணமும், முதலீட்டு வட்டி மற்றும் இலாபமாக உழைக்கப்படுகின்ற சகல பணமும் சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். சபையினால் சமூக பாதுகாப்பு ஊக்குவிப்பு படி நிதியம் மற்றும் சமூக பாதுகாப்பு அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் நிதியத்தினைத் தோற்றுவித்து பங்களிப்பு பணத்தினைச் சேகரிப்பதற்காகச் செலுத்தப்படுகின்ற ஊக்குவிப்பு பங்களிப்பாளர்களுக்கு அறிவுறுத்துவதற்காக ஏற்படுகின்ற செலவினங்கள் அந்த நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தன.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 மார்ச் மாதம் மின்சாரப் பட்டியல் உரிய திகதியில் செலுத்தப்படாமையின் காரணமாக ரூபா 21,934 தொகையான தண்டப்பணம் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஓய்வூதிய நிதிதயத்திலிருந்து ரூபா 19,050,771 தொகை செலவிடப்பட்டு புதிய கணனி முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை பின்னபற்றப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 மார்ச் 22 ஆந் திகதி வரையிலும் பங்களிப்பாளர்களின் பங்களிப்புப் பணம் அறவிடுதல் மற்றும் கணக்கு வைத்தல் பல வருடகாலமாக தாமதித்து மேற்கொள்ளப்படுகின்றமையினால் கணனி முறைமையை ஸ்தாபித்ததனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.1 அம் பந்தியின் பிரகாரம் சபையினால் 2012 தொடக்கம் 2016 வரை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இணங்க அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாடுகள் காலரீதியாக பிரித்து ஒவ்வொரு செயற்பாட்டிற்காகவும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் பெயர் குறிப்பிடப்பட்டு முறையாகத் தயாரிக்கப்பட்டிராததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளக்ககூடிய வகையில் அது விரிவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் அது கட்டுப்பாட்டுக் கருவியாகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக நிறுவனத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) முற்பணக் கட்டுப்பாடு